DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 01/2025**

அ.சா.7

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மாரிமுத்து | Caste: | |
| Father's/Husband Name: | ஆறுமுகம் | Calling: | சார்பு ஆய்வாளர், ஓய்வு |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 61 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 02.02.2026

( எதிரிகள் ஆஜர்.)

<u>**முதன்மை விசாரணை**</u>

நான் இராமநாதபுரம் மாவட்டம் அபிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2024ம் தேதி ஓய்வு பெற்று சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் வசித்து வருகிறேன். கடந்த 07.04.2024ம் தேதி அபிராமம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது கமுதி தாலுகா முத்து விஜயபுரத்தை சேர்ந்த சண்முகம் மகன் ஹரிகிருஷ்ணன் என்பவர் அபிராமம் காவல்நிலையம் வந்து கொடுத்த புகார் மனுவை பெற்று அபிராமம் காவல்நிலைய மனு ரசீது எண். 158/2024 ன் படி ரசீது கொடுத்தேன். புகார் கொடுத்த ஹரிகிருஷ்ணனையும் 1ம் எதிரி தசரதனையும் வரவழைத்து விசாரித்தபோது புகார்தாரர் நகரத்தார் குறிச்சியை சேர்ந்த பாலமணி என்பவரிடம் வாங்கிய நிலத்திற்குரிய கிரைய தொகை முழுவதையும் ஹரிகிருஷ்ணனுக்கு தசரதன் செலுத்திவிட்டால் ஹரிகிருஷ்ணன் தனது

மனைவி பெயரில் வாங்கிய நிலத்திற்குரிய பத்திரத்தை தசரதனுக்கு எழுதிக்கொடுப்பதாகவும் இருவரும் சமாதானம் செய்துகொண்டு மேல்நடவடிக்கை தேவையில்லை என்று மனுதாரர் எழுதிக்கொடுத்ததாலும் தசரதன் மனுதாரரிம் எந்த பிரச்சனையும் செய்துகொள்ளமாட்டேன் என்று எழுதிக்கொடுத்ததாலும் மேற்படி மனு மேல்விசாரணையின்றி முடித்துவைக்கப்பட்டது. நான் கொடுத்த மனு ரசீது **அ.சா.ஆ.3**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–

புகார் மனு கொடுத்தது சம்பந்தமாக இருதரப்பினரையும் அழைத்து விசாரித்தேன் என்றால் சரிதான். அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் எழுதிக்கொண்டேன் என்றால் சரிதான். வாக்குமூலங்களை டிஎஸ்பி விசாரிக்கும்போது நான் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். இருதரப்பினரையும் விசாரிக்கும்போது சொத்தின் சுவாதீனம் 1ம் எதிரி வசம் இருந்தது தெரியவந்தது என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் 1ம் எதிரி தசரதன் சொத்தை தன் பெயருக்கு கிரையம் பெற்று கொள்வதாக காவல்நிலையத்தில் எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது விசாரணையின்போது ஹரிகிருஷ்ணன் மற்றும் தசரதன் எழுதிக்கொடுத்த வாக்குமூலங்களை வேண்டுமென்று இவ்வழக்கிற்கு பாதகமாக இருக்கும் என்பதால் மறைத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. உயர்

அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

C MOHAN RAM

Digitally signed by C MOHAN RAM
Date: 2026.01.02 15:05:29 +0530

Sessions Judge,
Special Court for Trial of Cases Registered under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)